

# சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்?

## இதழ் II



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஸர்வார்ப்பணமும்! ப்ரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்?

## இதழ் II

# பொருளடக்கம்


1. சர்வார்ப்பணமும் பிரம்மார்ப்பணமும் என்ன செய்யும்?----61

2. பஞ்சகோசங்கள்---------------------------------------------84

3. மண்ணுக்கும் பொன்னுக்கும் ஓர் சிறிய விளக்கம்--------99

4. ஸ்ரீபகவத் அர்ப்பணமா? பிரம்ம அர்ப்பணமா?---------------110

எல்லாம் நீ!






பாடல் 91.

**சிவோஹம்** என்பதும் **தத்வம் அஸி** யும்,
ஒரே கருத்தையே, ஆணித்தரமாக உணர்த்துகிறது.
சோதித்து, விருத்தாம்சம் நீங்கும் போது அங்கு,
**ஆய, ஐக; ஐக்கியமே** அதன் அர்த்தம் ஆகும்.
(அவ்விரண்டிலும்) ஏகமதாம், விருத்தாம்சம்! அகத்தும் நீக்கி,
இயல்பான **ஐக்கியமே** அறிந்து அதுறவே,
**ஆய; மறை; பேதமெல்லாம்!**
இழந்து விடும் போதும், (எந்த விதமும்) தைவதத்தை போல்,
இந்தித்து, அதுவே நாம் என ஆகும்.

சிவோஹம் என்றால் சிவமே நாம்! நாமே சிவம்! என பொருள்படும்.
தத்வம் அஸி என்றால், பரமாத்மாவும்! ஜீவாத்மாவும்! பரம் பொருளுக்கு, அயலாக இல்லை என பொருள்படும்.
இவ்விரண்டு மகா வாக்கியங்களிலும் **பேதம்** எப்படி அறுபடுகிறது என்றால்? **மறை** விருத்தியை நாசம் செய்வதால், அறுபடுகிறது என புலனாகிறது.

(62)




இதன் முக்கிய கருத்து ஆய, ஜக, ஐக்கியம்| வேண்டும். ஆயமரே பேதம்| வேண்டாம்.

அதாவது எல்லாம் ஒன்றே என ஐக்கியப்படுவதே. நாமரூப ஜக ஜீவ தோற்றம் இல்லை இல்லை என்று, பேதத்தை நீக்கு.

இதுவே இப்படலின், உட்கருத்தாகும் என, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

பாடல் 101.

தினம் தவிராது, இயற்றியிரும் கர்மா என்றும்; திடமாக செய்கின்ற பக்தி என்றும்; அனந்த வித தெய்வ உபாசனைகள் என்றும்; அந்தந்த தெய்வ மூர்த்திகளின், பூஜை என்றும்; மனதில் மருவிய, கிந்த தோற்றம் எல்லாம்; பரமாகிய மண்ணே என்றும்; மண்ணாகிய பரமே என்றும்; அம்மண்ணையே, பரம் நாமே, நாமே பரம், என உறுதி நிச்சயம், செய்வாயாக.



ஓ

இதில் கூறிய, எந்த கர்மா ஆனாலும் சரி! பக்தி
மார்க்கம் எது ஆனாலும் சரி! தெய்வ உபாசனைகள்
எந்த நிலை ஆனாலும் சரி! அனேக விதவிதமான, தேவ
தெய்வ, ஆராதனைகள் ஆனாலும் சரி! மௌனத்தில்,
தீர்த்தம்! ஜோதி! ஸ்தலம்! இவைகளின், எந்த
வழிபாடுகள் ஆனாலும் சரி!

**நாமரூப!** சம்பந்தம் கொண்டதாகவும்

இவை **மனோவிருத்தி** சம்பந்தம்

கொண்டதாகும். நாம் **அறிவு ஆத்மா**


சொரூபம் ஆனவன்றி, இம்மனோவிருத்தி நாசம் அடையாது.

நாமரூபவிருத்திகள் கெட்டு சர்வார்ப்பணமும்!

மனோவிருத்திகள் நாசமாகி பிரம்மார்ப்பணமும்!

செய்தாலன்றி **சாதனை** முற்றுப் பெறாது.

இவன் முக்தியும் பெறமுடியாது, என்பதே ஸ்ரீஞானிகளின்
அனுபவம் ஆகும்.




தத்துவமாம்:—

ஜீவகர்த்தத்துவத்தையும்! (64)
ஈசகர்த்தத்துவத்தையும்
நாசம் செய்யும்
நமஸ்காரமாகவே
பரமாத்மாவையும்!
ஜீவாத்மாவையும்!
இணைத்து ஐக்கியப்படுத்தி
இல்லாமலும். மறு பிறவியே
பரம்பொருளாக முடியும்
அறிவதனாகிய
என்பதே இப்பாடலின் கருத்து ஆகும்.

பாடல் 104

**நாமரூபம்** எல்லாமே, பிரம்மமென்றும்;
**நாமும்** அந்த, பரப்பிரம்மமே என்றும்;
உன் **ஆன்ம** நன்மைக்காக, சொல்லியவற்றில்;
**அணு** அளவும்! சந்தேகம்! கொள்ளாதே!
உண்டு என்றும்; இல்லை என்றும்; **மறு**ப்பு வார்த்தை கூறாமல்;
நம்பிக்கையோடு, ஏற்றுக் கொள்வாயாக! காரணம்?
எப்படி என்றால்? நம் **பரகுரு** மீதும்! ஸ்ரீ பகவான்
மீதும்! ஆணையிட்டு சொல்கிறேன்.
இப்பாடலில், ஓர் சிறப்பு என்னவென்றால்? ஆறுவது
வரியில்:— **தத்துவமாம்** சிவம் ஆனை/ என
சொல்வது/ தத்பதத்தையும்! த்வம் பதத்தையும்!
அதாவது பரமாத்மாவையும்! ஜீவாத்மாவையும்!
**இணைத்து**! அறிவதத்தை இணையாமல் சொல்
வதால், இதில் ஓர் ரகசியம், இணைந்திருப்பதாக,
ஸ்ரீ மகான்கள் சொல்வர்.





அந்த ரகசியம்!

திரிகர்த்தாக்கள் என்றும் திரி லோகம் என்றும், கூறுவது பிரம்மன்/நாராயணன்/சிவபெருமான்/ என்றும், **பூ** லோகம்/ **பித்ரு** லோகம்/ **சொர்க்க** லோகம் என்றும், காயத்ரி மந்திரத்தை, அடிப்படையாக கொண்டு, சொல்வதுண்டு.

இதை ஸ்ரீமஹான்கள், விளக்கும் நிலையில் பூலோகம் என்பது, பாதம் முதல் இடுப்பு வரை என்றும், பித்ரு லோகம் என்பது, இடுப்பு முதல் கழுத்து வரை என்றும், சொர்க்க லோகம் என்பது, கழுத்து முதல் சிரசு வரை என்றும், சிவமஹான்கள், சொல்லக் கேள்விப்படுகிறோம். இதில் என்ன உணர்த்தப்படுகிறது என்றால்? **சரீரத்தை** ரக்ஷிக்கவே திரிகர்த்தாக்களின் வேலை எனத் தெரிகிறது.

ஆகவேதான், வேதாந்தம் ஓர் இடத்தில், சொல்லும் போது, **அண்டத்தில்** உள்ளதே **பிண்டத்தில்** என்றும், **பிண்டத்தில்** உள்ளதே **அண்டத்தில்** என்றும்,



ஆகவே நான் உடலில் இடது பாகம் பூலோகம் என்றும் மத்தி பாகம் பித்ருலோகம் என்றும் சிரசின் பாகம் என்றும் சொர்க்கம் என்றும் சொன்னார்கள். இக்கலியுக மனிதனின் சாதனை இது வரைதான் எட்டியுள்ளது. முக்தி எங்கே? பின் ஜீவன் முக்தி என்றால் என்ன? என்று ஜீவன் முக்தி என்று இருக்கின்றார் கேள்வியாய் தான் இன்னமும் மாந்தர். காரணம்:- மனதின் பிடியில் சிக்கிக் கொண்டார்கள்.

(66)

சொல்வது பொருந்தும். இன்னும் ஓர் ரகசியம் எப்படி இருக்கிறது என்றால்? **தன்னை** அறிந்தால் **தலைவனை** அறியலாம். (ஆத்மாவை) அதாவது தன்னுள் உள்ள, அந்தர்யாமியான அறிவை அறிந்தால் (கண்டால் அல்ல) எங்கும் உள்ள பரமாத்மாவை, அறிந்து உணரமுடியும் என, தெளியவும். அப்படியானால் தன்னை உணர வொட்டாமல் தடுப்பது எது? என கேட்டால் **மனமாயை** என்பதை **மாயாமனம்** என்பது, தெளிவாகவும். ஏன் மாயாமனம் என சொல்கிறார்கள் என்றால்? நாமரூப தோற்றத்தால், மயக்குவது **மாயா** ஆகும். அதை நான் / என்னுடைய / எனது / என மயங்குவது **மனம்** ஆகும். இவ்விரண்டுமே, நாமரூப தோற்றம் ஆகும். நான் / என்னுடைய / எனது / கெட்டால் நாமரூப, ஜகஜீவ தோற்றமும் இல்லை. எல்லாம் மண்ணே / மண்ணாகிய பரமே / என உணர்ந்தால் மாயாவுக்கு, இடம் இல்லை. மனமும் அங்கு பிறப்பதும் இல்லை. இருப்பதும் இல்லை. மனம் இறந்துவிடுது.




பாடல் 106

மன அசை வற்று, தன்னில் தான் நிலைத்து நிற்பதுவே:
**கைவல்யம்** ஆகும். ஜீவன் முக்தியாகும்.
தன்னில் **தான்** நிலைக்காமல், கடல் அலை போல்
அசைவதையே, பந்தம் என்பார்கள்.

**மேலும்?**

உன்னிடத்தில் / உன்னையன்றி / உன்னை அசைப்பவர்
**உன்னை** யல்லால், வேறு **எவரும்** இல்லை.
அங்கு எந்த, காரண காரியமும் இல்லை.
**தனிமையானவனே / நீ**
தன்னிடையே, தானைத் தனித்து நிற்பாயாக.
நாமரூபம் தோற்றும் வரை, **மன** அசைவு உண்டு.
நாமரூபம் அழிந்தால் எழுச்சியுமில்லை / வீழ்ச்சியுமில்லை
அதுவே ஜீவன் முக்தி!
உன்னை நீயே / அசைக்கிறாய் :- என்பதின் பொருள்.
இதை சிரத்தையுடன், உணர்ந்தால் விளங்கும்.



(A) அசைப்பது / மாயா /

(B) அசைவது / நாமரூபம் /


(C) அசைக்கத் தூண்டுவது / நான் / என்றல் / எனது / என்ற அஹங்கார / அதிகார / அபிமானம் ஆகும்.

(D) அப்படி அசைவதில், இன்பதுன்ப மாத சுவைப்பது **மனம்** ஆகும்.

ஆகவே இங்கு, அசைக்கத் தூண்டுவதை மட்டுமே, நிறுத்தி **அழித்து** விட்டால், அசையும் நாமரூபம் செயலற்று போகும். நாமரூபம் / செயலற்று விட்டால், **மாயா** வுக்கு வேலை இல்லை.

வேலை இல்லாத மாயா / பரசொரூபத்திலேயே, லயமாகி, விடும். மாயாவும் இல்லையானால், இருப்பது ஒன்றே / நடப்பது நலமே / என சும்மா சுகமாக இருக்கலாம்.

ஆகவே இந்த நாமரூபமோ / அதன் மாயாவோ / அதன் மனமோ / **உன்னை** யன்றி தனியாய் எங்கிருந்தும் வரவில்லை. உன் மனதைக் கொண்டு, உன்னை அசைத்தால் அது, பந்தம். உன் மனதை இல்லாமல், பண்ணி விட்டால், அதுதான் முக்தி.




69

பாடல் 106

உன்னில் நீ, நிலைத்து நிற்க வேண்டுமானால்?
நாமரூப, ஜக ஜீவ, சொரூபங்கள்! எல்லா வற்றையும்!
எந்த பேதமும் இல்லாமல்!
எல்லாம் **மண்ணே** என உணர்வாயாக.
அம்பரமே மண்! மண்ணே பரம்! யாமேபரம்! பரமே யாம்!
என்று **அகண்டபரபாவனையை**
பெறுவதுவே, சாதகனின் முடிவாகும்.


பாடல் 107. மேலே அனேக நிலைகளில், கூறியபடி,
அகண்டாண்ட பாவனை செய்ய செய்ய! செய்யச் செய்ய!
**ஜக. ஜீவ.** சொரூபங்களின் **நாமரூபம்!**
உன் ஸ்வ அனுபவத்தால், **உனக்கு** மட்டும்,
மாறும்! பின் மறையும். மாறும்! மறையும்! என்றால்?
ஒரேவார்த்தை!

மாறும்:— நாமரூப ஜக ஜீவ, சொரூபங்களின் போக்கு
வரவு! கொடுக்கல் வாங்கல்! இவைகளில் **விகாரம்**
தோற்றமில் **விவகாரம்** இயல்பாக மாறும்.





மறையும் :- நாமரூப, ஜக ஜீவ, உறவு சுற்றம், நட்பு,
போக்குவரவு கொடுக்கல் வாங்கல் தனில்;
**பயன் அற்றுப்போகும்!** பயன் அற்று
போகும் என்றால், அங்கு **வினை** பற்று இயல்பாகத் தன்மை
யால்.
நம் நிலையையும் மறந்து விடுவோம்.
காரணம்?
அவர்கள் நிலையையும் மறந்து விடுவார்கள்.
திட்டமிட்ட T.V. காட்சியாக மாறும். அதாவது
**பொம்மலாட்டமாக** தோன்றும்.
நாமரூபம் மறைவதால், அதை மறைந்த நிலை என்று கூறுவர்.
இது **உனக்கு மட்டும்** தான்!
**மற்றவர்க்கு** இல்லை யென்றே சொல்லலாம்.
அந்த நிலையில், நமக்கு வரும் **வாக்கு** இறை ஒலி
யாகவும்! பர ஒலி யாகவும்! இயல்பாக மாறி விடும்.
அங்கு இன்ப துன்பம் தோன்றாது. நிலைத்த **ஆனந்தமே** தோன்றும். இதுவே அனுபவ நிலையாகும்.



(71)

பாடல் 108

(A) இந்த நூல், சிரத்தையுடன், கேட்டு அதை மனனம் செய்து, நிதித்யாசநியியில், ஸ்வய அனுபவம் பெறும் மாணவன் மிகவும் கடினம். (அறிந்து உணர்ந்தவனல்ல)

(B) அதேபோல், இந்த நூல், அந்நூலாகவே **ஆனைப்பதற்கு** கிடைப்பது, மிகமிகமிக, கடினமாகும்.

(C) அதேபோல், இந்த நூல், **கையில்** பெற்று! **கருத்துடன்** உணர்ந்து! அதுவே நாம்! என அரிதினும் அரியவரே. ஆறவ் ஆகும் மாணவர்கள்!

அவர்கள் பணிவும் கனிவும் இனிமையும் எளிமையும் இவைகள் இணைந்த **பொறுமையும்**! உடையவர்கள் ஜீவன் முக்தர்களே! பாக்கியவான்களே!!


(D) எப்பவனும் தராத, நூலாக இருப்பதனாலும்,

பதமுக்தியை ,, ,, ,,



அதுவே நாம் என ஆனால்
அது யார்? (72)
அது எது?
அது எப்படிப்பட்டது?
இருப்பு இல்லாதொன்று
நாம் சேர்ந்தால் நாமே
இல்லாமல் போயிருவோம்.
நாம் இல்லாமல் போனால்
இந்த சொந்த பந்த பாசம்
என்ன ஆகும்? வேண்டாமையா வேண்டாம். நாம்
இல்லாமல் போகவா வந்தோம்? என்று தோடம்.

**சுவை** யாதுதான் இருந்து, அதை சுவைப்பவன் எவனும்
அதாவது
இல்லாத தன்மையாலும், இல்லாமல் ஆக்கிய தன்மையாலும்,
**ஐஸ்வர்யங்கள்** நாம ரூப, இருப்பு
இல்லாமல் ஆக்கிய தன்மையாலும்,
**இல்லை** எனச் சொல்வதனாலும்,
**அதுவே நாம்** என, ஆனால் நாம் **என்ன**
ஆவோம்?
நாம் எப்படி இருப்போம்? என விளக்க இயலாததினால்,
பிரம்மானந்தம் ஒன்றே நாம் என, உணர்த்துவதினாலும்,
அதை
கண்டாரும் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை,
என **மன** கற்பனைக்கு எட்டாத தன்மையாலும்,
மனப்பிரச்சினைகளிலும், ஓர்
மனமயக்கத்திலும், மனப்பிரச்சினைகளிலும், சுவையை கண்டதினாலும்,
**ஊற்றுப்**
**பிரம்மானந்த** நிலையை, உணராத
தன்மையினாலும், நமக்கென ஓர் இருப்பு இல்லாமல்,
அது நாமென, உணர்ந்தபின்பு, என்ன செய்யப்
போகிறோம்? என்ற கவலைப்பாவினையினாலும்,



அஹங்கார
ஆதிக்க அதிகார (73)
வெறியாட்டம்
இந்த **மனம்**
இந்த ஜீவ + ஆத்மாவை
ஆத்மாவாக விடுவதில்லை.
இந்த ஜன்ம துன்பத்தின்
சுமையானது ; அந்த
பிரம்மானந்தத்தை மறைத்து விடுகிறது போலும்?
அறுவ் சிதகற்பனைவானந்தத்தையே முடிந்தது.

பக்தியிலாவது, ஸ்ரீ பகவானை கண்டு, ஆனந்தித்து,
அனுபவிப்போம், இங்கு எந்த அனுபவமும் இல்லையே!
என்ற **மனோவி**ருப்பம், முழுவதாக
**துவைத** பயம் இல்லாமல்!
" இன்பத்தை, சுவைப்பதனையும், இங்கு அந்த
அத்வைதத்தை, எவரும் விரும்புவதில்லை. அவர்களைப் பற்றி
நமக்கு தேவையில்லை! குறிப்பாக! அந்த நாம பேதம் இல்லவேயில்லை.


**வியாபாரம்/விளம்பரம்/ஆடம்பரம்!**

பேர்/புகழ்/பட்டம்/பதவி/கௌரவம்/அந்தஸ்து!
இவைகளின் ஒட்டுமொத்தமாக,

**போட்டி & பொறாமை!**

விடாதவர்கள் **அத்வைதம்** ஏற்பதில்லை.
ஏற்றால் அனுபவம் ஆவதில்லை. வாய்ஜாலமாகவும்
வித்வத்வம் ஆகவும் இருக்கும்.
குறிப்பாக சொன்னால், அத்வைதம் இவர்களை ஏற்பதில்லை.
எல்லாம் ஒன்றே அவ்வளவே!
அவ்வளவே! யாமே அது! ஐக்கியம்.

சு ... **பாபா.**



# பேறு!!!

தேசிகன் தெரிவித்த திறப்படி,
தீரமாய் நிதித்தியாசம் புரிந்ததால்,
ஈசன் நல்லருள் பெற்றவர் முக்தியை,
எய்தலாம் என, முன்பு விளம்பி மற்றும்,
ஏசிவா! இந்து நூலின்! மஹத்துவம்,
யாவும் இதிலிருந்தே முடித்திடல்,
ஆசிஸ்வா! ஆனந்த தாண்டவம் ஆடும்,
நம் அம்பிகை ஈசனின்
அகண்ட சொரூபமே!!!

பொருள்:- ஸ்ரீ ஸத்குரு அருளியபடி, ஏக்கம்! உருக்கம்! சிரத்தை! நம்பிக்கை வைராக்கியத்தோடு! தீவிரமாய், மின்! நிதித்தியாசம் செய்பவர்; முதலில் ஸ்ரீபகவான் கிருபையை பெறுவர்.



மண்ணாகிய மகேசனுடைய நிழலே யோகமாயாதேவி. (75)
இவ்விரண்டுமே இயக்கமற்றதாகும்.
இவ்விரண்டும் **இணைந்த** மறுகணம்
நாமரூபத்திற்கும் இயக்கமுண்டாகிறது. அதன் இயக்கத்திற்கும் தத்தி உடையதாகி விடுகிறது.

ணா; அதாவது, சர்வார்ப்பணத்தால்!
பெறுவர் என, **முதலில்** சொல்லி முடித்து;
**அதன்பின்** அதன்பவமாக! அதன்பவமாக!!
அத்வைத நாவாகிய, ஸ்வய ஞானனுபவத்தின்!
**குற்றமற்ற** பேதமற்ற! விருப்பு வெறுப்பற்ற!
அந்த நாவின் மகத்துவமானது; ஓதியவாறு
உணர்ந்து, முடித்ததால் (அது முடிந்ததால்)
**குற்றமற்ற** அதாவது, மாசு மருவற்ற! அதாவது,
ஒப்புயர் வற்ற! ஆனந்த தாண்டவம் ஆடும்! என
சொல்வது :- **அம்பிகை & ஈசன்!** எனவும்;
அதை கொள்வது :- **யோகமாயாவும் &**
**மண்ணாகிய** (பரமாகிய) **மகேசனும்**
எனவும் சொல்ல வேண்டும்.



இருக்கிறது என்ற (76) ஓர் இருப்பு தன்மை மட்டுமே இருந்தால் அது பர அசேஸமே. இயக்கமும், குணமும், சேர்ந்தால் அது நாம ரூப ஜக ஜீவ தோற்றமாகும். இதைப் போலவே தொடரும்.


குறிப்பு:— மகேசன், உபயோகம் அற்ற, மண் ஆகும். யோகமாயாவும், உபயோகம் அற்ற ஜலம் ஆகும். இவ்விரண்டுக்கும் **நாமம்** மட்டுமே உண்டு.
,, **ரூபம்** இல்லை என்றே சொல்ல வேண்டும். இவ்விரண்டுக்கும், தோற்றம் இருக்கிறதே? அது ஓர் உருவம் தானே? எனத் தோற்றும். உருவம் என வந்தால், அது இருப்பும், இயக்கமும், அதன் குணமும், ஆகிய **மூன்றும்**, இருந்தால் மட்டுமே, அது நாம ரூபம், ஆகும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர். மண்ணுக்கும், ஜலத்திற்கும், இருப்பு ஒன்று மட்டுமே இருப்பதால், இருக்கிறது என்ற இருப்பை மட்டுமே, வாக்காலோ, வரியாலோ, சொல்ல முடியும். ஆதலே, அவ்விரண்டுக்கும், நாமம் ஒன்றே உண்டு.
,, ,, ரூபம் இல்லை என்பதே சத்தியம்.



ஈஸ்வராதி (77)
களுக்கும்;
சூட்சும நாம இருப்பு
தன்மை ஒன்றே உண்டு.
ஈஸ்வராதிகளும்
இயக்கமும் குணமும்
உடையவர்களாகவே
தோன்றுகிறார்களே எனில்
அவர்கள் இயங்கவில்லை.
அவர்களின் நிழலாகிய மாயாதேவி இயக்கமும்
குணமும் உடையதைப் போல் உண்டுபண்ணிக் கொண்
டிருப்பதை உணர வேண்டும். முடிந்தது.

கீழே கூறுவது,
↑ வாக்கிய விளக்கமேயன்றி, பொருள் விளக்கம் இல்லை.

ஆகவே, யோகமாயாவை, அம்பிகை! என்றும்,
**மஹேசனை** ஈசன்! என்றும்,
இங்கு இவ்விரண்டும், இணைவதால் அவ்விரண்டும்,
**நாமரூபம்** உண்டாக்கத் தக்கதாக,
வஸ்து என ஆகிவிட்டார்கள்.
அவ்விரண்டும், அசைந்தால்தானே, **மூன்று**
**வது** ஒன்று உண்டாக முடியும்? உண்டாக்க முடியும்?
அவ்விரண்டின் **அசைவையே** / **நி**
உபசார வசனமாக, **ஆனந்த தாண்டவ**
என்றார்கள் ஸ்ரீமஹான்கள், **இன்ப நடனம்** என
சொல்லவில்லை. (இன்பம் = ஜகம் / ஆனந்தம் = பரம்)
இவ்விரண்டையும், **மீத்யாக** தொன்ற
வேண்டாம்.



(78)

மேலும் ஓர் மஹத்தான, உண்மை என்னவென்றால்?

அப்பாடலின் முடிவானது:— ஆ சிவ்வா ஆனந்த தாண்டவம் ஆடும் நம் (நாம்) அம்பிகை (மஹேசன்) ஈசனின்! **அகண்ட சொரூபமே!** என முடிக்கிறோம் இதன் உண்மையாவது?

**கண்டபாவன:**— சாட்சி நிலையாகும். இது ஈஸ்வராதிகள் என்ற, ஸ்ரீபகவான் நிலையாகும். இது ஓர், அளவுக்கு உட்பட்டதாகும்.

**அகண்டபாவன:** சர்வசாட்சியாகும். இது **பர** நிலையும்; பரநிலையை, தம் ஸ்வய அனுபவமாக பெற்ற **ஞானியின்** நிலையாகும். இது அளவிட முடியாது! அளவுக்கு அப்பாற்பட்டதாகும். அளவிடப்படாத நிலையில், ஈஸ்வராதிகளின்! சூட்சும



ஈஸ்வராதிகள் (79)
அளவுக்கு
உட்பட காரணம்:—
மாயா சம்பந்தம்
ஆகும். அவர்கள்
மாயாவை விட்டுவிட்
டால் அவர்களும் அக
ண்டம் ஆவார்கள்.
அதேபோல் ஜீவாத்மாவா
கிய நாம் மனதாலேயே அள
வுக்கு உட்பட்டிருக்கிறோம். அம்மனதை விட்ட
மறு சேதனம் நாமும் அகண்டமே ஸத்தியம்.

**நாமரூபம்** இருக்கமுடியாது / இருக்க இயலாது.

ஆகவே ஈஸ்வராதிகள் அளவுக்கு உட்பட்டவர்களே.
அதே ஈஸ்வராதிகள் / மாயாவை, முழுமையாக
விட்டு விட்டால், அவர்கள் எந்த தோற்றமும் இல்லை.

**அது** என்ற **பரமாகவே** (ஸத்தியமாகவே)
இருக்கிறது என உணரவும்.


இதில் மற்றோர், உண்மையையும் உணரலாம்:—
பரசொரூபத்தை / மனதையும் உவமானம் சொல்லலாம்.

இங்கு மாயா / என்ற ஜலம் / கிளைந்து, பிளைந்தால்.

இவ்விரண்டும் **ரூபம்** / (இயக்கம் & குணங்கள்)
இல்லையாதலால், **இருப்பு** / ஒன்றே ஸத்தியமாக இருக்கிறது.

இப்பரசொரூபத்தை, ஓர் சமுத்திரமாக உணர்ந்தாலும்
இங்கும், ஓர் உண்மையை உணரலாம். இங்கு,

(A) சமுத்திரம் பரசொரூபம் /
(B) அதை அசைக்கும் **வாயு** / மாயாவாகும்.
அந்த வாயுவின் சேர்க்கையால், உண்டான



மூன்றாவது வஸ்துவின் உவமானம்.

# உப்பும், பனிக்கட்டியும்,

நாமரூபம், தோற்றும்
நிலையில், ஓர் வஸ்துவாகிறது.

**பனிக்கட்டியை**, ஈஸ்வராத்மாகவும்,
**உப்புகட்டியை**, ஜீவாத்மாக்காகவும்,
கொள்ளலாம்.


இதன் ஒற்றுமை, வேற்றுமை, என்னவென்றால்?

பனிக்கட்டியில், சுவையில் **உப்பு** இல்லை.
உப்புக்கட்டியில், " " உண்டு.

இதுவே வேற்றுமை.

பனிக்கட்டி பொம்மையும், உப்புப் பொம்மையும், சமுத்திர **ஜலமே**, சமுத்திரத்தில் தோன்றி, சமுத்திரத்திலேயே, மறைந்து மயமாக ஆவதே

இதுவே **ஒற்றுமை.**






(A) பனிக்கட்டியை, ஈஸ்வராதிகள் எனச் சொன்னது, எப்படி என்றால்? பனிக்கட்டியானது! சூரியன் அக்கினி சம்பந்தம் கொண்ட உஷ்ண வாயு! பட்டால் போதும், பனிக்கட்டி! ஜலமயமாகி விடும். ஆகவே இங்கு, ஸ்ரீ பகவான் நிலையால், ஸத்வ குணமே! சூட்சமரூபமும்! இங்கு பொருந்தும்.

(B) உப்புப் பதுமை என்ற, ஜீவாத்மாவானவன்! முக்குணமும் (விஷேசதுர்க்குணமும்) இணைந்தவனும். இவன் அஹங்கார மமகாரத்தால் உறைந் ஊறி இறுகிப் போனவன் ஆகும்.

இவன் காற்று! அக்கினி! சூரியனுக்கு! அஞ்சாதவன் ஆவான். இம் மூன்றுக்கும், கரைந்து மயமாக மாட்டான். இவன் ஞானம் ஆகிய, ஜலத்தில் தாக்கப் போட்டால் தான், நாமரூபத்தை, இழந்து நாசமானவன். (மனதுணைக் கெட்டு, மனம் மாந்தாகி மயமானவன்)




(8௨)

இவை அனைத்தும், தற்சமயம் ஸ்ரீமஹான்களின், அறிவுரையில் வந்ததாகும்.


முடிவு!!!

என் ஆத்மானந்த குழந்தைகளே! சமுத்திரத்தில் தோன்றிய உப்போ, பனிக்கட்டிகளோ மனதால், ஓர் உருவம் தாங்கிக் கொண்டது போல், இவ்வுலகமாகிய நாடகமேடையில் வந்து விகாரமும், வியகாரமும், அடைகிறோம், என பேசப்படுகிறது. ஆனால் உண்மையில்லை. அம்மனமே சர்வார்ப்பணத்தால் நல்லமனமாகி விட்டால், உப்புப் பனிகள், நாசமாகி கெடும். அதுவே அறிவாக, மாறிவிட்டால் பனிக்கட்டி என்ற, ஈஸ்வராதிகள், நாமரூபம் (சூட்சுமமானது) நாசமாகி கெடும். அவ்வளவே!





பிரம்மார்ப்பணத்தால்! **பேரறிவாக**
பிரகாசித்தால்; எல்லாம் **நாமரூபம்!**
நசித்த நிலையில், அகண்டானந்தபாவனையில்,
இருந்து கொண்டு **அகண்டாகார**
**நதியில்** கரைந்து கலந்து மயமாகி விடலாம்.
அதுவே நாம் என்றும்; நாமே அது என்றும்,
ஒன்றி கலந்து கரைந்து மயமாகி விடுவீர்களாக.
மயமாகி விடுவீர்களாக, என்று என்ன கூற வேண்டும்?
**மயமாகி!** வாழ்வீர்கள் என, உறுதி கூறுகிறேன்.
கவனக்குறைவால், அறியாமையின், அறிவிலா
மாந்தர்! தாம் மனதால் நாடிய நாமரூபத்தை விட
முடியாமல், **வினை** என்றும்; **விதி** என்றும்; **மன**
**தால்** சஞ்சாரம் செய்து கொண்டு, அதை என்றும் விதி
பிராரப்தம் என, பிதற்றிக் கொண்டு, அவ்விதமாய்
முறையாக சர்வார்ப்பணமும் & பிரம்மார்ப்பணமும்!
செய்யாமல், ஜீவன் முக்தி இங்கு இல்லை.
எல்லாம் ஒன்றே அது இறைவனே! அதுயாமே!
யாமே அது! இது சத்தியம். த **பாபா.**



# பஞ்சகோசங்கள்!

அன்பான குழந்தைகளே!

இருபத்திநான்கு!


தத்துவங்கள் என, [சாஸ்திரியாளர்கள்] சுருக்கமாகவே, சொன்னார்கள். அவையாவன :- ஞானேந்திரியம் **5** என்றும், கர்மேந்திரியம் **5** என்றும், பஞ்ச பிராணன் **5** என்றும், பஞ்ச கோசங்கள் **5** என்றும், அந்தக்கரணங்கள் **4** என்றும், ஆக மொத்தம்,

**24** ஐயும் **தத்துவார்த்தம்!**

தத்துவ, அர்த்தம் என சொல்லுவார்கள். இவை இருபத்திநான்கையும், உணர்ந்து அறிந்தாலே,

**தத்** பத பரமாத்மாவையும்! **த்வம்** பத!

ஜீவாத்மாவையும்! இணைத்து ஸ்ரீ ஸத்குரு கிருபையால், ஜீவன் முக்தி பெறலாம் என்பது, ஸ்ரீ ஞானிகளின் அனுபவமாகும். இதன் விளக்கம், ஆரம்ப பாடத்தில் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்.



# தத்துவபோதம் என்ற மடலில்,

வெளியிட்டிருந்தோம். குழந்தைகள் எல்லோரும், படித்தது தான்! இருந்தாலும், சிறிது ஞாபகப் படுத்துகிறேன். ஓர் பழமொழி உண்டு.

(1) படித்தவன் பாட்டை கெடுத்தான்! என்றும்,

(2) எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்! என்றும்,

(3) சொன்னவன் வார்த்தை கெடுத்தான்! என்றும்,


(4) கேட்டவன் வாழ்வைக் கெடுத்தான்! என்றும்,

அனுபவ ஸ்ரீ மஹான்கள், சொல்லி வைத்தார்கள். இதன் பொருள்?

(1) கல்வி கற்காமல், பாடம் படித்தவன் நாம் எதற்காக வந்தோமோ, அந்த ஆன்மிக வாழ்வை கெடுத்தவன் ஆவான்.

(பாடம் படிப்பால்! நல்வாழ்வை கெடுக்கிறேன்)

86



(௨) அறிவின் கல்வியை, எழுதியோர் சொல்லியோர் உணர்ந்தாமல், உவகையாட்டத்தை எழுதியவன் எழுதும் ஏட்டை, நோட்டை கெடுக்கிறான்.

(௩) அறிவை புகட்டக்கூடியவன், தமிழ் வாக்கை கொடுக்கிறான்.

(௪) அதை உணர்வு பூர்வமான, அனுபவநிலையால், கேட்டவன், நாமரூப ஜகத்தில், வாழ முடியாது. வாழ இயலாது. அவன் பொய் வாழ்வை, நொடிக்க வருவான்.

இனி இந்திரிய விளக்கம்.

(௧) ஞானேந்திரியம்:— மெய், வாய், செவி, மூக்கு, கண், என ஐந்தாகும். இவை முறையே, ஸ்பரிசம், இதில் ஊறு அடங்கும். சுவை, கேட்டல், நுகர்தல், பார்வை, என ஐந்து ஆகும்.

(௨) கர்மேந்திரியம்:— கைகள், கால்கள், வாக்கு, மலம், ஜலம், துவாரங்கள் இரண்டு என ஐந்தாகும்.

மேலே கூறிய, ஞானேந்திரியம் ஐந்தும், முறையே,



உ

(87)

1 பக்தாள் சேவையும் ஸ்ரீ பாகவத சேவையும் செய்ய வேண்டும்.

2 **ஸத்** விஷயங்களை பேசலாம்! **அஸத்** விஷயங்களை பேசக் கூடாது.


3 ஸத் விஷயங்களை கேட்கலாம்/அஸத்தை கேட்கலாகாது.

4 இங்கு மூக்கு என்பது, நறுமணம்/துர்மணம் இவைகளை நுகர்வது அறிவது அல்ல. **ஸத்வ** குண வாஸனையை அறிவதாகும்.

5 அனுசாரமான காட்சியை காண வேண்டும். ஸ்ரீ பக்த, ஸ்ரீ பாகவத, ஸ்ரீ பகவான் சொரூப காட்சியை காணலாம்/ இவையே ஞானேந்திரியங்களின் செயல்கள் ஆகும். ஆனால் இவை ஐந்தும் **கர்மேந்திரியமாக** செயல்படுகிறது. இது **கலியின்** பெருமை ஆகும்.

(இந்த ஞானேந்திரியங்கள் ஐந்தும் இன்றுமாறுகடக்கிறது)

6 கர்மேந்திரியம்:— கீழே கூறிய கர்மேந்திரியமான கைகள்/ கால்கள்/ வாக்கு/ மல/ ஜல த்வாரங்கள் இவை ஐந்தும் ப்ராரப்தத்தின் **ப்ரவர்த்தியை** செய்யலாம். ஆனால் அதற்கு மாறாக;



பிரவர்த்தி (௪௪) என்றால் செய்ய வேண்டிய விதிக்கப்பட்ட கர்மா. அபிவிருத்தி என்றால் தொடரும் கர்மாவும், புதிய கர்மாவும் ஆகும் என பொருள்படும்.
இதைப் போலவே புனருத்தாரணம் = புதிய ஆலயங்கள் ஆகும்.
ஜீர்ணோத்தாரணம் = பழையவற்றை புதுப்பிக்கல் மூத்தவை அபிவிருத்தி / பிரதாயப பிரவர்த்தி ஆகும்.


**ஆகாமிய** நிலையில் **அபிவிருத்தியை** செய்து கொண்டிருக்கிறது. இதை ஓர் நிலையில்

**புனருத்தாரணம்** தேவைகளில்.
**ஜீர்ணோத்தாரணம்** தேவை.

புது கர்மா தொடர வேண்டாம் / பழைய கர்மா முடியட்டும்.

③ பஞ்சப்பிராணன்:— பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், என்ற 5 வாயுக்களாகும். இது **யோக** தாரணையோடு சாடியதாகும். இது நமக்குத் தேவையில்லை.

④ பஞ்சகோசங்கள்:— அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம், என ஐந்தாகும். இவ்வைந்தும், ஆன்மசாதகனுக்கு தேவைதான். இவைகளை சற்று சுருக்கமாக, கோடிட்டு காட்டுகிறேன். ஆனால் இவை எல்லாமே **சர்வார்ப்பணத்தில்** நிவர்த்தி ஆகின்றன



89

# கோசம்

என்ற நூலில் கோர்க்கப்பட்ட பாசிகள் போன்ற தானம் பிராணவத்தில் எப்படி எழுத்துக்கள் கோர்க்கப்பட்டிருக்கிறதோ அதே நியதியில் இப்பஞ்சகோசத்தில் ஐந்து தத்துவங்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றன என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம். இருந்தாலும், விளக்கம் கீழே காண்க! கோசம்

என்றாலே, இணைத்து கோர்க்கப்பட்ட ஒன்றாகும்.


அதாவது முன் சொன்ன 10 இந்திரியங்களுக்கும்!
பஞ்சபிராணங்களும்!
இனி சொல்லப் போகும் 4 அந்தக் கரணங்களுக்கும்!

இந்த பஞ்சகோசங்களே! ஆதாரம்! ஆதரவு! என உறைவும். ஆகவே கவனம் தேவை.

(1) அன்னமய கோசம் :- இது உண்ணும் ஆகாரம், சம்பந்தப்பட்டதாகும். சைவ உணவாக இருக்க வேண்டும். அசைவ உணவு கூடாது. நாம் உண்ணும் உணவு, மூன்று நிலைகளில், வேலை செய்கிறது.

(A) உடல்புஷ்டியின் தாது பொருள்கள்!
(B) மல ஜலக் கழிவுகள்!
(C) மனோநலம் & தோஷம்


இந்த அன்னமய கோசத்தில், மனம் சம்பந்தம் கொள்வதால் உணவில் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.



உண்ணும் உணவையும், பருகும் ஜலத்தையும்,
சாப்பிடும் முன், ஸ்ரீபகவத் அர்ப்பணம்,
செய்து சாப்பிட்டால், ஆகார தோஷம்
நீங்கும். அதனால் மனம் தெளிவடையும்.


(இ) ப்ராணமய கோசம் :- இது சுவாசக் காற்று,
சம்பந்தப்பட்டதாகும். மனம் அடங்க காற்றுப்
பயிற்சி, அவசியம் தேவை. மனம் அடங்க ஆ
சையை, அழித்தாலும், காற்றும் அடங்கும்.
மனமும் இணைந்தே அடங்கிவிடும். ஆசை அடங்க,
சர்வார்ப்பணம் ஒன்றே போதுமானது.
இதை சாட்சி பாவனையென்றும் சொல்லலாம்.

(ஈ) மனோமய கோசம் :- இம்மனமானது, ஏதேனும்
ஓர் நாம ரூபத்தையே, பற்றி எழும், பற்றி ஆடும்.
இதனைக் குண! தோஷம் பின்னவிடும். இந்த
குணம் ஏறாமலும், குண தோஷம் பின்னவிடாமலும்,
இருக்கவேண்டுமானால், மனோ சாந்தி, அமைதிக்கு,



சர்வார்ப்பணமும்! ஸத்குரு தேவருடைய, உபதேச
தீவிர், சிரத்தை, நம்பிக்கை வேண்டும். இங்கு
சாட்சிபாவமே முற்றுப் பெறும்!
சர்வசாட்சிபாவமே! **ஆரம்பம்** ஆகும்.


இன்பதுன்பம் ஜீவனிடம்! அது புண்ணியபாபம் சம்பந்தமும்
பிறப்பிறப்பும், சம்பந்தம் கொண்டதாகும்; நன்மை தீமை!
சுக துக்கம்! ஆகிய இருமைகள் ஆறும் **அறிவின்**
நிலையாகும். அறிவே ஆத்மா! ஆத்மாவே அறிவு! என்றும்
ஸ்ரீபகவானே அறிவு! அறிவே ஸ்ரீபகவான்! என்றும்.
கூறும் போது, இங்கு இருமைகள், வரக் காரணம் என்ன?
எனக் கேள்வி எழுவாம். இங்கு மனம் இல்லாவிட்டாலும்.
இருந்தாலும்,
அறிவு
**மாயாவின் மயக்கம் உண்டு!**
தோற்ற தோன்று! மாயா உண்டாகுவதால், இந்த மயக்கம்
உண்டு என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். இந்த மயக்கமே,
அந்த இருமைக்கு காரணம் என உணர வேண்டும்.



(௯௨)

(4) விஞ்ஞானமய கோசம்:— இது பிரித்து அறிதல் ஆகும். அதாவது ஸத்| ஸித்| ஆனந்தம்| இம் மூன்றையும், ஒன்றாக இணைத்து, நாமரூபத்தை இல்லை இல்லை| இல்லை| யென்று தள்ள வேண்டும். இது ஜீவ சாட்சியாவின்| ஸ்திரமாக இருக்கும். இங்கு நாமரூபம் தோன்றினாலும் வெறு இருந்து, செயலற்று தோன்றும். அதன் இயக்க காரண காரியம்| தெரியாது. காரணம் இங்கு மனம் இல்லை. அறிவும் பேரறிவாக, படிப்படியாக, மாறி வரும். இங்கு இன்பதுன்பம் தெரியாது. இது லோகமாயாவின் முடிவாகும். இங்கு ஜகத் மறைத்தால் நிலையாகும்.

(5) ஆனந்தமய கோசம்:— இந்நிலை பெறும்போது, நாம் அதுவாக| இருக்கிறோம்| என்ற பேருணர்வோடு, கூடிய நிலையாகும். இது ஒருமை ஆகும்! இருமை இல்லைதான்! அந்த உணர்வும், மறைந்து நாசம் ஆக வேண்டும். அதனால்தான் ஸ்ரீமஹான்கள், சொல்லவொண்ணா| என்றும் நினைக்கவொண்ணா| என்றும்.



மிருகங்கள், பறவைகள், பழங்கள், மீன்கள், மனிதர்கள், என நாமரூபத்தை விகாரம் அடையாமல் செய்வது **மனம்**, ஆகும்.

93

மேலே கூறியவைகளை இனம் இனமாகவும், ரக ரகமாகவும் தேர்ந்தெடுச் செய்து விகாரம் அடைய செய்து ஓர் தரமாற்றத்தை உண்டுபண்ணுவது **புத்தி** ஆகும்.

ஓர் **அத்தாணந்தனில்** என சொன்னார்கள்.

இந்த ஆனந்தமய கோசமானது, பேரானந்தம் எனவும் கூறவாம். அதீதானந்தமாக இப்பிரம்மானந்தமானது, பிரம்மானந்தம் என்னும் மாறுவதே, **அகண்டகாரம்**, ஆகும் நிலையாகும். அதுவேதான், ஆனந்தமயகோசமும், முடிந்த முடிவாகாது, என்றார்கள்.


இதுவே, பஞ்ச கோசங்களின், விளக்கமாகும். இனி அந்தக்கரணங்கள், நான்கையும் பார்ப்போம்.

அந்தக்கரணங்கள்:- மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், என நான்காகும்.

**(A) மனம்**:- நாமரூப ஜகத்தை, காணும் போது, இது இன்னது என, அதன் **இனத்தை** மட்டும், காண்பது மனம் ஆகும். குறிப்பாக சொன்னால் இந்த நாமரூபத்தையும், பிரிக்காமல், இது இன்னதுதான் என்ற, **அருணாணைத்** நேரடியாக மனம் ஆகும்.

இதன் தேவதை சந்திரன் ஆகும்.





புத்தியால் ஆகாரம் அடைந்ததை உறுதிப் படுத்தியும், மேலும் ஆசையை ஊட்டி விவகாரமாகிய யோசனையை உண்டு பண்ணுவது **சித்தம்** ஆகும். (94)

**அஹங்காரம்** ஆகும். — இம் முன்னும் செய்யும் நற்காரியம் புரிந்து வினையாடி புண்ணிய பாபத்தை சேர்ப்பது

**(B) புத்தி:**— இதன் தேவதை பிரம்மன் ஆகும்.

இது சிருஷ்டியின் நிலையாகும். **பலபல** கற்பனை நிலையில் செய்து விரிவுபடுத்துவதாகும்.

உதாரணம்:— மரங்கள் என்பது மனம் ஆகும்!
இன்னின்ன மரங்கள் என்பது புத்தி ஆகும்!
பழங்கள் என்பது மனம் ஆகும்!
இன்னின்ன பழங்கள் என்பது புத்தி ஆகும்.
ஒன்றாய் பார்ப்பது மனம்! தரதரமாய் பிரிப்பது புத்தி ஆகும்.
இதுவே பிரம்மனின் சிருஷ்டி ரகசியம் ஆகும்.

**(C) சித்தம்:**— இதன் தேவதை விஷ்ணு ஆகும்.

இந்த புத்தி என்ற பிரம்மனால் சிருஷ்டிக்கப்பட்டதை அழகு! வசீகரம்! கவர்ச்சி! ஆற்றல்! ஓர்மயக்கம்! ஆக இந்த ஐந்தையும் கொடுத்து அதை **உறுதிப் படுத்துவது** சித்தம் ஆகும். இதையே இன்று **சக்தி** (காத்தல்) என பேசப்படுகிறது.





ஈசன் மாயாவை வைத்து விளையாடும் விளையாட்டை இந்த மனிதன் மறைமயக்கத்தினால் நானாக பாவனை செய்து மறை அவஸ்தைப்படுகின்றான்.

(95)

(D)

**அஹங்காரம்:**- அதன் தேவதை ருத்திரன் (சிவன்) ஆகும். இது முன்பு கூறிய (இருநிலைகளின்) **சிருஷ்டி ஸ்திதி**களை **வினை** பெருகும் நிமித்தம் **நான் என்றால் என்னது** என (அஹங்கார! அதிகார! அபிமானம்) புசித்து, இதை ஓர் **ஜீவ** விளையாட்டாக, செய்கிறீர்கள். என மட்டும் உணர்ந்தால் போதும்.

இந்த ஜீவ விளையாட்டை, **ஈசனே** (பகவானே) செய்கிறான் என, உணர்ந்தால் போதும். இதை ஈசனின், விளையாட்டாக கருதாமல், நான்! நான்! என முட்டி மோதி, மண்டை உடைவது, இந்த அப்பாவியான ஜீவாத்மாவாகும். இந்த நான்! என்றால்! என்பதை விட்டால் போதும். இவ்வுலகம் யாருக்காக இயங்குகிறது? இதை இயக்குவது யார்? யாருக்காக இருக்கிறது என, அறிவுடன் நீ கவனிக்கலாம்,



உ

இது ஈசன் (96) விளையாட்டுத்தானே? என இந்த மனிதன் நினைக்கிறாரே, அந்த க்ஷணமே இவன் ஆத்மாவாகி பகவான் என்பதே சத்தியமானதும் இவன் வசிய மூலமானதும்.

நமக்காக இருக்கவும் இல்லை / இயங்கவும் இல்லை! (நாம் ஸ்ரீபகவானின் மூலத்தை / நாம் ஸ்ரீ பகவானின் அம்சம்)

மனதிற்காகவே, இவ்வுலகம் இருக்கிறது என்றும், இயங்குகிறது என்றும், உணர்ந்தாலே போதும்.


இதை எப்படி உறுதிப்படுத்த முடியும் என்றால்? ஞானிகளின், அனுபவ வாசகம், ஒன்றுண்டு, அதாவது

"மாயை என்ற சக்தி தன்பால் மனம் என்னும் மைந்தன் தோன்றி, தாவ நல்ல, அறிவின் (ஸ்ரீபகவான் அதாவது திரிகர்த்தாக்கள் என்ற ஈசன்) தன்பால் நாமரூப ஜகத் தோற்றம் உண்டாக்கி வைத்தான்" என்பது, அனுபவ வாசகம் ஆகும்.

இது ஈச&மாயா/ விளையாட்டாகும்.

இங்கு மாயாவின், மைந்தனை மனதை, இயக்க நியமித்தும் வைத்து, விளையாடுகின்றனர் என உணர்ந்தால் போதும்!





இவ்வாறு உடலை இருப்புடையதாக ஆக்குவதே இந்த (97) மனம், புத்தி, சித்தம் என்னும் ஜீவ கர்த்தத்துவம் ஆகும்.

இச் ஜீவ கர்த்தத்துவமே ஓர் ஜீவனை தோற்றுவிக்கிறது. இது ஒழிந்து நாசமானால் ஜீவன் இல்லை. ஆன்மாவே உண்மை அது நாசமாகாமலே இருந்து போகும்.


அந்த **ஜீவ** கர்த்தத்துவத்தினாலேயே, இந்த **ஜீவனுக்கு இருப்பு** உண்டாகிறதே யல்லாமல், இந்த ஜீவனுக்கு வேறு இருப்பும் இயக்கமும் இல்லை என உணர்ந்தால் போதும்.

ஜீவ இருப்பு :- நான், என்னால், ஆகும்.

ஜீவ இயக்கம் :- என்னுடையது, என மூன்றுதான்.

இம்மூன்றும், ஒழிந்து நசிக்கால், ஜீவ இருப்பும், ஜீவ இயக்கமும், இல்லாது, ஒழிந்து நாசமாகும் என மட்டும், உணர்ந்தால் போதும்.

இதனால் ஈசனுக்கோ, பரத்திற்கோ, என்ன லாபம்? என கேட்டால், இரண்டிற்கும், எந்த லாபநஷ்டமும் இல்லை வேறில்லை இது நம் **மன மாயையே**, பாபநஷ்டமாக, இன்ப துன்பமாக, தோற்றுகிறது. இதை சர்வார்ப்பணம் ஒன்றிவிட்டோம், நாசம் செய்ய முடியுமே யன்றி வேறு எந்த மார்க்கமும் இச் ஜீவ, ஈசு, விராட்டை, நாசம் செய்ய முடியாது. செய்ய இயலாது.



ஈசக்மாயா விளையாட்டை, எனக்கு
எனதுமனம், பாவனை பண்ணுவது மன மடமையாகும்.
இவைகளே, அந்தக்கரணங்கள் என்று நான்காகும்,
என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். இந்த 24ம்
இருபத்திநான்கு தத்துவமாக, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.
இவை ஞானேந்திரிய / கர்மேந்திரிய / பஞ்ச-கோச / கரணம் /
ஆகிய இவைகள், மிக மிக முக்கியமானவை என
ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.
இத்துடன் இதை நிறைவு செய்கிறோம்.
எல்லாம் ஒன்றே! அது சிவமே!

பாபா.

அது யாதோ! யாமே அது! அதுவே நீங்கள்! இது சத்தியம்.

(A) மாயா / நாமரூப ஜக சொரூபம்.

(B) மனம் / நாமரூப ஜகத்தின் விளையாட்டு அம்சம்.

(C) நாம் / இவைகளை சாட்சியாக காணும் ஆனந்த சொரூபம். முதலில் ஸ்ரீ பகவானின் குழந்தை, பின் ஸ்ரீ பகவான் / பின் பரசொரூபமே நாம்!

வடிவேல்.



பாரமார்த்திய மண்,

பரம் என்ற மண், (99)
யோகமாயா
சம்பந்தத்தால், பொன்
ஆனது. ஆனால் பொன்
னில், ஆவரணம் என்ற
நாம ரூபம்! இல்லாதான்
ஆனாலும் நாம ரூபம்
பெற்றதாக, ஓர் வஸ்து
என ஆகி விட்டது. ஆனால்
மண்ணில், நாம ரூபம் இல்லை.

அம் மண், நாமரூபம், பெற்றதாக இல்லை.
ஆகவே மண் என்ற பரம், நாம ரூப தன்மை குறி
மனம் வாக்கு-காயம் எண்ணம் சொல் செயல் இருக்க
இயலாது

# மண்ணுக்கும்! பொன்னுக்கும்


ஓர் சிறிய விளக்கம்!

**பரம்!** இதற்கு, உதாரணம் **மண்!** ஆகும்.

**ஈசன்!** ,, ,, **பொன்!** ,,

**ஜீவ** சொரூபங்களின், சரீராதிகள், அனைத்திற்கும், உதாரணம், **ஆவரணம்!** ஆகும்.

**பரம்!** உபயோகம் அற்றது. உபயோகிக்க முடியாதது. வாக்கினால் (ஸத்தான) சொல்ல, ஓர் விளக்கம் தான், உண்டே தவிர, வேறு எந்த, விளக்கமும், இல்லை என்பதே, ஸத்தியம். அதற்காகத்தான், **மண்!** என்ற, ஓர் உதாரணம், கொடுத்தார்கள் ஸ்ரீ மஹான்கள். ஆனால் **ஈசனிடம்** (பொன்னிடம்) மதிப்பு, மரியாதை மற்றும், உண்டு. ஆனால் அவன், **தனியே** இயங்க முடியாது.



மறு அம்ஸம் (100) என்றால், அதை சாயல் என்ற, நிழல் எனப் பொருள் படும். மறுவடிவம் என்றால், அதை ஓர் அதன் அம்ஸ தோற்றம் என, பொருள் கொள்ளலாம்! நிழல் வேறு! வடிவம் வேறு! என பொருள் கொண்டால் போதும்!

இயங்க இயலாது. இங்கும், ஓர் முக்கியம், என்ன வென்றால், மனம்! வாக்கு! செயல்! எதிலும், எட்டமுடியாத பரத்தை, மனம்! வாக்கு! செயலுக்கு! எட்டும் நிலையில், கொண்டு வந்தது, பரத்தின் **ஓர்** மறு அம்ஸமான, **யோகமாயா!** ஆகும். இந்த யோகமாயாவின், சேர்க்கையினால், **பரத்தின்** மறு வடிவம், **ஈசன்** என ஆனது. இதை முன் சொன்ன, உவமானத்தின்படி **மண்ணின்** ஓர் சக்தியுருந்தால், மண்ணை **பொன்னாக!** மாறியதென்று, கொள்ள வேண்டும். இதைப் போல, இந்த பொன்னிடமும், மதிப்பு, மரியாதை, மட்டும் உண்டு. இங்கு இரும்பு தன்மை மட்டும் உண்டு. இயக்கத் தன்மை, இல்லை என்பதே முக்கியம். பரத்தின், மறுவடிவமான, ஈசனின் **நிழலே!** **யோகமாயா!** ஆகும். இங்கு இந்த ஈசன், தம் நிழலை, பற்றிய நிலையில் **நிறைபட்ட** நிலையில்




பரம் என்ற (101)

ஒன்று ஒன்றும் இல்லாமலும் / ஒன்றும் இயலாமலும் / இருந்தாலும் அனைத்தையும் ஆதாரம் யோகமாயா / யோக மாயா / விஷ்ணுமாயாவும் / மாயையும் / இரண்டற்று நின்று கோடானு கோடி நாம ரூபங்களையும் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டு ஒன்றும் அறியாதது போல் மௌனமாயிருப்பதுவே அப்பரத்தின் பெருமை என தன்னை அறிந்த ஞானிகள் சொல்வர்.

அனைத்து ஜீவ தோற்றங்களும் தாமே. ஆனால் முன்பே ஓர் சக்தியினால் மண்ணே பொன்னாகியது என சொன்னேனல்லவா? அப்பொன்னே தன் சாயலினால் தன்னை ஆவரணங்களாக மாறியது (இது பலவிதமான தோற்றம்) என மட்டும், உணர்ந்தால் போதும். அப்பொன்னின் சாயலான, அக்கினியே, யோகமாயா ஆகும் என உணர வேண்டும்.

(A) பரத்தின் / யோகமாயாவினால், ஈஸ்வராதிகளும்; ஈஸ்வராதிகளின் / யோக மாயாவினால், அனைத்து ஜீவ கோடிகளின், சரீராதிகளும் தோன்றின; என மட்டும், உணர்ந்தால் போதும்.

(B) ஆனால், அப்பரமே / யோகமாயாவுக்கும் / ஈஸ்வராதிகளுக்கும் / யோகமாயாவுக்கும் / அதன் அனைத்து ஜீவ கோடிகளுக்கும் / ஆதாரம் / ஆதரவு / ஆகாரம் / அது எல்லாம் ஒன்றே என உணர்ந்தால் போதும்.
(பரம் ~~தவிர~~ வேறொன்றும் இல்லை)



மண்ணுக்கும், (102)
இரும்பு இருந்தாலும்
பொன்னும் போல்,
மதிப்பும் மரியாதை
யும், இல்லாத
தன்மையில் அது
இருந்தும், இல்லாததே.

ஆகவே மண்ணுக்கு, இரும்பும், இயக்கமும்
இல்லை, யென்பதே ஸத்தியம்.

(மண்ணுள் பொன் உண்டு
பொன்னுள் மண் உண்டு) இதன் உண்மை!

# மண்ணும் பொன்னும் ஒன்றே


மண்ணை, பொன்னாகவும் ஆக்க முடியும். அதேபோல்
பொன்னை, மண்ணாகவும் ஆக்கவும் முடியும்.

(பொன்னை கவனியாமல், மண்ணிலேயே, போட்டு
விட்டால், காலக் கிரமத்தில், பொன் மண்ணாகிவிடும்.)
பொன்னை மண்ணாக்க வேறு முயற்சி வேண்டாம்.

ஆனால் அம்மண்ணை, பொன்னாக்கிய **பெருமை**
யோக **மாயா**வுக்கே சாரும்.

ஆனால் ஓர் உண்மை, என்ன வென்றால்?
மண்ணை, பொன்னாக்கிய, மாயாவுக்கு, அம்மண்ணை
ப் போலும், அப்பொன்னைப் போலும், தோற்றத்தில்
**இரும்புத்** தன்மை, இல்லவே இல்லை. ஆனால்,
**இரும்பு** மட்டும், அப்பொன்னுக்கு, இந்த
**மாயாவினால்** உண்டு என்பது ஸத்தியமே.

(இரும்பு என்பது, பொன்னின், மதிப்பும், மரியாதையும் ஆகும்)



மண்ணாகிய பர (103)
த்திற்கு இரு
ப்பு என்ற நிலையில்,
எந்த நாமமும்! எந்த
ரூபமும் இல்லையென்பதே
ஸத்தியம். ஆனால்
சொல் விளக்க நிலையில்,
அது! அதுவாக
வே!
இருக்கிறது என விளங்கப்படுகிறது. அது
விளம்பவும் படுகிறது என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
ஆகவ் இருப்பு உண்டு. பொருள் இல்லை.

அந்த இருப்பை, மண்ணும் அறியும்! பொன்னும்
அறியும்! ஆனால் மண்ணுக்கும்! பொன்னுக்கும்!
இயக்கம்! இல்லாத தன்மையால்,
அதை (இருப்பை) சொல்லவோ! விளக்கவோ!
முடியாது என்பது ஸத்தியமே!
அவ்விளக்க, இயக்கத்தின்
நிமித்தமாகவே, யோகமாயாவின்! அம்ஸ (மகன்)
மாயா
மனம்! தோன்றியது. இந்த மாயாவின் மனமே,
மண்ணையும் (பரத்தையும்) பொன்னையும் (ஏகனையும்)
விளக்கும் நிலையில், மனவாக்காக!
வடிவெடுத்தது என, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
(மண்ணாகிய) பரத்தை! ஸத்தியம்
(A)
எனச் சொல்லி, உண்மை உண்மையாகவே இருக்கிறது
என்று, உபசார நிலையில் சொல்லி,



உ

காட்சிக்கு எளி (104)
யான் காண்! என்றும்,
தெய்வம் மனுஷ்யனாவும்!
என்றும் தெய்வம்
தோன்றிந்த தினவன்!
என்று அனுபவ வாக்காக
ஸ்ரீமஹான்கள் சொல்வதால்
எல்லோருக்கும் எளிதாக
அகப்படுகிறான். ஆகவே அவன்
மிக மிக மிக மிக மிக எளியவனே!
ஆதலால் எல்லோருக்கும் அவரவர் மனத் திரை மறைக்கிறது.
வேறு எந்த திரை மறைவும் ஒளிவு மறைவும்! இல்லை.

அம்பரத்திற்கு, **இருப்பு** நீ தன்மையை
மட்டும், கொடுத்து விட்டு, **வாக்கும்**
மௌனமாகி விடுகிறது. இதைத்தான், ஸ்ரீமஹா
ன்கள் தம் அனுபவ வாக்காக, சொல்லும் போது;


**சொல்லுக்கு அடங்கான்** காண்!
**சொல் இறந்து நின்றவன்** காண்! என்றும்;

காட்சிக்கு எளியான் காண்! என்றும்;
கண்டாலும் காணேன் காண்! என்றும்;
மாட்சி மனம் வைத்தார்க்கு,
மாணிக்கத்தின், உள் ஒளி தான்! என்றும்;
தம் அனுபவ வாக்காக சொன்னார்கள்.
இதன் உட்பொருள்:- சொல்லால் விளக்க
முடியாது. சொல்லில் அடங்காதது என்றும்;



எல்லாம் அவன் (105)
பொருளே என்றும்,
எல்லாம் அவன்
செயலே என்றும்,
அவனன்றி அணுவும்
அசையாது என்பதும்,
அனுபவ சத்தியமானால்
காட்சிக்கு எளியான் காண்! என்பதும்
சத்தியமாகி விடும்.

சொல்லும், மௌனமாகிவ்
உணர்வு (மன உணர்ச்சிகள் அடங்கி)
மேலோங்கி, பொய் கெட்டு மெய்யானா! என்ற
நிலையில், அதை உணர முடியும் என்றும்,
காண்பதற்கு! மிக, மிக, மிக, மிக, மிக, மிக,
எளிமை யானது என்றும்,
உன்னையல்லால், வேறு கதி இல்லை! என்ற நிலையில்,
நீ கதி! ஆனால் சக்தி! என்ற
எளிமைக்கே எளிமை யாகும்.
நிலையில், நவரத்தினங்களில், மாணிக்கம் ஒன்றே,
உள் ஒளி பொருந்தியதாகும்.
உன்னை அழித்து! உன்னுள் நிலைத்து! சுயம்
ஜோதியாய்! பிரகாசிப்பான் என்பதே இதன்
உண்மை கருத்தாகும்.



நாமரூபம் அநித்யம், அதுவே ஆசை. (106)
நாமரூபம் இல்லை.

நாமரூபம் தோற்றம்! மனம் அதுவே நாமரூபமாக காணும் நிலையில், குண தோஷம் பின்னிடும். அதனை நோக்கினால், ஜனன மரணம் உண்டு.

மனுஷ்ய நம்மை உணரும் நிலையில் சூக்ஷ்ம நாமம்! மட்டும் உண்டு. எந்த ரூபமும் இல்லை. இதை வைத்து என்ன சொல்கிறார்கள் என்றால்?
தொடரும்.


அம்பர சொரூபத்தை, **இருக்கிறது!** எனமட்டும், ஓர் மனவாக்கை கொண்டுவிட்டு, அவ்வாக்கு, மௌனமாகி விடுகிறது.

**(பொன்றாகிய) ஈசன்!** நீ எந்த வடிவில் கருதினும், அந்த வடிவில், தோன்றுவான்! என்றும், சொந்த வடிவம், வெயரிலவான்! **சுத்த மோன சின்மயமான**

அதாவது, ஸத்தின் விளக்கம் **பரம்!** என்றும், ஸித்தின் விளக்கம் **ஈசன்!** என்ற நிலையில் முறையே இருப்பின் நிலையிலும்! இயக்க நிலையிலும்!

**சூக்ஷ்மநாமரூப** மதிப்புக்குரியானை! என்ற நிலையில் ஈசுவரத்து விளக்கம் கொடுப்பது, இந்த **மனைவாக்காகும்!** என, ஸ்ரீ அநுபவ மஹான்கள் சொல்வர்.





நாமரூபமாக காண்பது, மன வாக்காலே. அதை மண்ணாக (பரமாக) உணர்வது அறிவாகுமே. இங்கு காட்சி இல்லை. ஆகவே நாமரூபமாக கண்டாலும் அதை நீ காணவில்லை. ஆகவே கண்டாலும் காணவில்லை என்று

ர்கள். அப்பரசொரூபத்தை வாக்கால் சொல்லாமல் [illegible] எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது! என [illegible]

மண்ணாகிய, பரந்ததற்கு, இருப்பின் விளக்கமும்!
பொன்னாகிய, ஈசனுக்கு, இருப்பு & இயக்கம்!
விளக்கமும், தந்த இந்த மனவாக்கானது!


ஓ பொன்னே **ஆவரணங்களாக**! (அனேக ஜீவ கோடிகளாக) வடிவம் எடுத்த நிலையில், இந்த **மனவாக்கானது**

தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவு! என்ற நான்கு நிலைகளிலும், இம் எண்ணம் **மனவாக்கானது**! சொல்! செயல்! நிலையில் விளக்கம் தரும்!

இவ்விளக்கம், இந்த மனவாக்கால், எப்படி விரிகிறது என்றால், **தேவை & ஆசை**! என்ற இரண்டில், இன்பம் & துன்பம் என, பின்னிக் கொண்டு,

அதுவே, சம்சார சாகரம் எனப்பேசப்படுகிறது.

அதுவே, ஜனன மரணம் என ஆகிறது.




அறிவால் உணர்ந்தால், 108

அவ்வுணர்வு, உள் உணர்வெனில், புறச் செயல் அல்ல. ஆகவே, அதை உள் ஒளி பொருக்கு மாணிக்க உள் ஒளி!

என்றுக்கும் வெளியே காண முடியாது என்றும், அகவுணர்வாக உணர முடியும் எனச் சொல்லி, கூர்ந்த அறிவு உடையவர்க்கு மாணிக்கம், உள் ஒளி என, நிறைவு செய்திருக்கும்.


ஓர் நிலையில், **மண்ணும் | பொன்னும்** ஜடமே! அவைகள் விளங்கப்படுவது, **மாயா** ஆகும்! அவை முறையே, இரும்பு நிலை! ஒன்றும்; இரும்பும் & இயக்கமும் | விளக்கமும் மற்றொன்று (விளம்பமும்) விளம்பமும்! பெறுவது, மாயா மனத்தாலாகும். அங்கு, மாயா இல்லையாவதால், பொன் | விளங்காது! துலங்காது! அம்மண்ணை (பரத்தை) பொன்னாக்கிய பெருமை, யோக மாயாவுக்கே பொருந்தும். அப்பொன்னை, ஆபரணங்களாக்கிய பெருமை, போக மாயாவுக்கே பொருந்தும். அவ்வாபரணங்களை, **குணதோஷங்கள்!** என ஆக்கிய பெருமை, விஷ்ணு மாயா என்ற, மாயா **மனத்திற்கே** பொருந்தும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



மண்ணில்,
மண் என்ற நாமா
தான் உண்டே தவிர
வேறு உருவம் இல்லாதது
ஆல், எந்த மயக்கமும் இல்லை.
இது யோகமாயாவாகும்.
பொன்னில் பொன் என்ற
நாமமும்தான் உண்டே தவிர;
வேறு உருவம் இல்லையாயினும்
ஒரு உருவம் பெறத்தக்கதாக
உருவம் பெற்றுக் கொண்டிருக்கிறது. அத்
பொருளாகி இருக்கிறது. சேர்க்கையால், ஓர்
தன்மையால், லோகமாயாவின், சேர்க்கையால், ஓர் மதிப்பும் மரியாதையும் பெறுகிறது.
பிரகாசம் தோன்றி

பொன்னிலும்! மண்ணிலும்! ஆவரணம் என்ற,
நாமரூபம் இல்லவேயில்லை. விஷ்ணுமாயா
என்ற, மாயாமனமே, தேவைகளையும்! &
ஆசைகளையும் / தோற்றுவித்துக் கொண்டு,
குணதோஷங்களில், பின்ன விட்டுக் கொண்டு,
விதவித, ஆவரண மயக்கத்தையும் / அந்த மோஹத்
திரைவ், விக்ஷேப கலக்கத்தையும் / உண்டு பண்ணி,
ஜனன மரணத்தை, உண்டு பண்ணிக் கொள்கிறது.
ஆகவே இந்த, மனம் ஒன்று / சாந்தி ஆனால்,
போதும். முன் கூறிய நிலையில், சர்வார்ப்பணத்தால்,
வினையின் / குணதோஷம் நீங்கி; பிரம்மார்ப்
பணமாகிய, இருப்பது ஒன்றே / என்றும், நடப்பது
நவமே! என்றும், சந்திரனைப் போல, குளிர்ந்த
சாந்தியில் நின்றால், மனம் ஏகாந்த நிலையில்
ஜீவன் முக்தி / பெற்று, சும்மா சுகமாக இருக்கலாம்.

பாபா.



பிரம்ம அர்ப்பணத்தின் பயன் !!! பக்கத்தில்
பிரணவத்தின் பக்கவிப் பூவைபாம்
தொடர்பாக

# ஸ்ரீபகவத் அர்ப்பணமா? பிரம்ம அர்ப்பணமா?

ஓர் குழந்தை கேட்டது? ஸ்ரீபகவத் அர்ப்பணம் சிறந்ததா?
பிரம்ம அர்ப்பணம் சிறந்ததா? அவ்விரண்டிற்கும், உள்ள
வித்தியாசம் என்ன? ஸ்ரீபகவானும், பிரம்மமும், ஒன்று
என்று தானே, சொல்கிறீர்கள்? பின் இந்த பிரிவினை ஏன்?

வைத்தியம்:— உண்மைதான் கொழந்தே! ஸ்ரீபகவானும்!
பிரம்மமும்! ஒன்றுதான், ஆனால் ஸ்ரீபகவானிடம் **மாயா**
கலப்படமாகி இருக்கிறது. அங்கு பிரம்மம் **சுத்தமாக**
இருக்கிறது. ஆகவே பிரம்மம் தான், முதலிடம் பெறுகிறது.
ஸ்ரீபகவான், இரண்டாம் இடம், பெறுகிறது. ஆனாலும்
ஸ்ரீபகவானின்! சர்வார்ப்பணமாகிய, பகவத் அர்ப்பணமே!
முதலில் தேவை?

வேதா:— காரணம் கொடுக்க முடியுமா பாபாஜி?

வைத்தியம்:— என்ன காரணம் கேட்கிறாய்?

வேதா:— ஸ்ரீபகவத் அர்ப்பணத்தில், என்ன பலன் பெறுகிறோம்?
பிரம்ம அர்ப்பணத்தில் என்ன பலன் பெறுகிறோம்?


வைத்தியம்:— ஸ்ரீபகவத் அர்ப்பணத்தினால், பிறவியின் **பளு**
குறையும்! **ஆகாமியம்** நாசமாகும்.

வேதா:— ஓர் ஸத்திய வாசகத்தையும் சொல்கிறீர்
களே பாபா! பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தையை!
என்று. இந்த சல்வாத ஜகமோ! வெறும் நாம ரூபமோ!



பிரம்மார்ப்பண (111)
நந்தன் பயன்:—
பிரம்மம் என்றால் அது
நாம ரூப குணம் குறி
கடந்தது. இயால் வாக்
காலும், வரியாலும்,
விளக்க முடியாத
ஒன்றாகும். அப்பிரம்மம்
மாயா சம்பந்தத்தினால்
ஓர் தோற்றம் பெறுகிறது.
மாயாவான் மகன் மனம்
சம்பந்தத்தினால் நாமரூப குணமும் இயக்கமும்
பெறுகிறது என்பது அறிந்ததே. தொடரும்

வதா:— அது சம்பந்த, வினைகளோ! பிரம்மம் ஸத்தியம்!
என நீ பெரும் போது, சூரியனைக் கண்ட பனி போல்,
விலகி விடாதா பாபா?
வைத்தியம்:— கொடுந்தே வதா! அவசியம் விலகிவிடும்.
அந்த மன சம்பந்தப்பட்ட, வினை ஆட இயல்பானை
உன் உடல் ஆடுகிறது? அதை என்ன செய்யப் போகிறாய்?
வதா:— ஆமாம் பாபா! உண்மை தான்! எப்பாம் ஒன்றே
என திட உணர்வு இருந்தால், போதாதா பாபா?
வைத்தியம்: (சிரித்துக் கொண்டே) கணவன்! குழந்தை!
மனைவி! உறவுகளை எல்லாம், பேதம் இல்லாமல்
ஒன்றாக பார்க்கும், திறன் உன் மனதிடம்
இருக்கிறதா?
வதா:— (சற்று உள் ஆழ்ந்து சிந்திக்கிறாள்) எம் அருமை
பாபாவே! அதில் சற்று மருட்சியும் சுமிரட்சியும்!
சந்தேகமும்! சந்தேகத்தால் கலக்கமும்
இருக்கத்தான், செய்கிறது. இவை ஏற்பட காரணமென்ன?



இப்போது இங்கு மூன்று தோன்றுகிறது ||உ

பரம்! மாயா! மாயாமனம்! இவை முறையே மண்! ஜலம்! நாமரூபங்களின் தோற்றங்கள் ஆகும். இங்கு **மண்** ஒன்றே சத்யமாகிறது. மற்றும் அனைத்தும் அதனின்றும் தோன்றியதாக அறிகிறோம். அதனின்றும் தோன்றிய அனைத்தும் ஜடமானம் ஆகும். தொடரும்.

வைத்தியம்:- அவற்றின் மேல் உள்ள, பிரியவாசனை தான் காரணம்?

வதா:- ஹே பாபா! இதை அந்த நாமரூபம் தந்ததா? **மனம்** ஏற்றுக் கொண்டதா?

வைத்தியம்:- **நாமரூபம்** மாயாவின் விளையாட்டு. **மனது** என ஏற்றுக்கொண்டது, மனதின் விளையாட்டு.

வதா:- இவ்விரண்டையும், **பொய்** எனத் தள்ள முடியாதா?


வைத்தியம்:- தள்ளிப்பாரேன்?

வதா:- அவ்விரண்டும், நான்! உன்னுடையது! என சொல்லவில்லை; சேரவில்லையே! சேர்ந்தாவல்லவோ தள்ள முடியும்?

வைத்தியம்:- சேர்ந்தது எனப்பார்த்தாலும், அதை சேர்த்தது எது? இனி தள்ளப் போவது எது?

வதா:- ஓஹோ அம்மா பாபாவே! இங்கும் **மனம்** தான் தோன்றுகிறது.

வைத்தியம்:- அறிவான வதா! மனம் தான்! எனத் தெரிந்து கொண்டாயல்லவா? மனதைக் கொண்டே, மனதைத் தள்ளிப் பார்ப்போம்?





வேதா:- மனதைக் கொண்டே மனதை தாண்டுவதா?
புரியவில்லையே பாபா? சற்று விளக்குங்கள்?

வைத்தியம்:- மனமே அறிவு அறிவே மனம்!
மனம் மறைந்தால் அறிவு!
மனம் மலினம் ஆனால், மனம்!
அப்படியானால், உன்மனதை மறைத்தாலே அது அறிவாகிவிடும்.
அறிவு பிரகாசித்தவுடன், மனம் போய்விடும். இதுவே
மனதைக் கொண்டு, மனதை அகற்றும் நிலையாகும்.

வேதா:- மனம் என்றால் என்ன? அறிவு என்றால் என்ன?

வைத்தியம்:- மனம்! என்றால், ஆன்மாவை மூடிய ஓர்
திரை! அதுவே ஜீவன். அறிவு என்றால் ஆன்மா!
அந்த ஆன்மாவை, மனம் மூடினால் ஜீவன் ஆன்மாவை
எதுவும், மூடமுடியாதுதான். ஆனாலும், ஜீவ விளக்கத்தின்
நிமித்தம், உபசாரமாக இப்படி பேசப்படுகிறது.
ஆன்மாவுக்கு, அன்னியமாய் எதுவும் இல்லை என்பதே
வைத்தியம்!
அதே ஆன்மா மாயாவை! பற்றிய நிலையில்,
ஸ்ரீபகவான் ஆகும். இந்த ஆன்மாவையும் பற்ற
முடியாது! பற்ற இயலாது! ஸ்ரீபகவான் நிமித்தம், பற்றிய
தாக





பிரம்மமாகிய மண்ணை (மண்ணையாகிய பிரம்மத்தை, வைத்து இந்த நாமரூப விகார நாசம் செய்ய வேண்டும். அதன் வழி முறை:- எல்லாம் மண்ணையாகவே, பரமாகிய நாமமே, நாமமாகிய பரமே என்ற நிலையில் அனுபவ ரீதியாக:-

இருப்பது ஒன்றே, நடப்பது நடனமே, எனவே பிரம்மார்ப்பணம் செய்தே ஆக வேண்டும் முடிந்தது.


உபசாரமாக இவ்வாறு பேசப்படுகிறது. மேலும், ஸ்ரீபகவானுக்கும் **இருப்பு** இல்லையென்பதே வாக்கியம் (ஸ்வரூபமே ஸ்ரீபகவான் ஆவை) **நாமரூப, ஜகஜ்ஜீவ** இருப்பான் நிலையில், ஸ்ரீபகவான் உண்டு. நாமரூப ஜகஜ்ஜீவ தோற்றம், **அனைத்தும்** மறைந்து, எல்லாம் **மண்ணை** நிலையில் (பரமானந்த நிலையில்) ஸ்ரீபகவானும் இல்லை. இதுதான் மனதிற்கும், அறிவுக்கும் உள்ள ஞானம். ஆகவே ஸ்ரீபகவத் அர்ப்பணம், ஸ்ரீபகவானுக்கும்; பிரம்ம அர்ப்பணம், பிரம்மத்திற்கும் என உணர வேண்டும்.

வநா:- ஆமாம் பாபா, சர்வார்ப்பணத்தில், வேறு விதிமுறைகளும் உண்டோ?

வைத்தியம்:- ஆமாம் குழந்தாய், மூன்று விதிமுறை உண்டு

வநா:- அவைகள் எவை?

வைத்தியம்:- கொழுந்தே வகை, சர்வார்ப்பணத்திலிருந்து, எந்த விதிமுறையும் இல்லைதான். ஆனால் ஸ்ரீபகவத் அர்ப்பணத்திற்கு மட்டும் மூன்று சொல்வர்




ஆகாரம் உட்கொள்ளும் போதும் ஒரு பொருள் கொடுக்கும் போதும் பிரம்மார்ப்பணம் நினைவில்! ஈஸ்வரார்ப்பணம் நினைவில்! செய்கிற அது பொருத்தமும் காரணம் செயலற்ற ஒன்றின் நினைவில் அர்ப்பணம் செய்வது பொருந்துமா! அது தகுமா! தொடரும்.

வைத்தியம் அவை ஈஸ்வரார்ப்பணம்! பிரம்மார்ப்பணம்! கிருஷ்ணார்ப்பணம்! என மூன்றும். இதில், ஈஸ்வரார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! பர தர்மத்தோடு கூடியதாகும். கிருஷ்ணார்ப்பணம் மட்டும், தெய்வ தர்மத்தோடு கூடியதாகும். ஈஸ்வரார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! நான்கு யுகத்திற்கும், பொருந்தும். கிருஷ்ணார்ப்பணம் மட்டுமே! இக் கலி யுகத்திற்கே பொருந்தும்.

வைதா:—காரணம் என்னமாமா? சற்று விளக்குங்கள்?

வைத்தியம்:— ஈஸ்வரார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! குணத்த நிலையாகும். அது ஞானம் ஒன்றிற்கே பொருந்தும். ஆனால் கிருஷ்ணார்ப்பணம்! ஒன்றே இக்கலிக்கு, தோஷ குண நிவர்த்தியாகும்.





செயல்உள்ள (116)

ஒன்றின் மீதும் நாம் அர்ப்பணம் செய்தால் அநுபவமும் உண்டு பயனும் உண்டு இந்த பயனும் / பலனும் / நமக்கு தேவை இல்லாமல் ஆனாலும் விளையும் / மனமே

அதன் விளைவே நமக்கு சேர்ந்து வந்தால் சர்வார்ப்பணத்தால் பயனும் பலனும் அடைந்த பின் பிரம்மார்ப்பணத்தால் சர்வமும் நாசமடையும் ஒழிந்தது.

வதா :- ஆமாம் பாபா :- கிருஷ்ணார்ப்பணத்திற்கும் சர்வார்ப்பணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

வைத்தியம் :- கிருஷ்ணார்ப்பணம் ஆகாத தோஷ குணங்களை, போக்கும் என்பதும் சர்வார்ப்பணம் வினைகளை நாசம் செய்யும் என்பதும், வினைகள் நாசமானவே, அதன் குணதோஷங்களும் நாசம் ஆகும் என்பதும் ஸ்ரீமஹான் கந்தசாமியாக அறிந்தேன்.

வதா :- அப்படியானால் பாபா! இந்த கிருஷ்ணார்ப்பணம் எதை வலியுறுத்துகிறது?

வைத்தியம் :- கலிதோஷ நிவர்த்தியை வலியுறுத்துகிறது.

வதா :- அப்படியானால் பாபா! இந்த சர்வார்ப்பணம் எதை வலியுறுத்துகிறது?

வைத்தியம் :- எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனக்கே! என்ற சர்வார்ப்பணமானது,



கிருஷ்ணார்ப்பணத்தினால் (117)
தோஷம் நிவர்த்தி ஆகும்
என்பதன் விளக்கமாவது
நாராயணனையும், கிருஷ்ணனையும் ஒன்று. நாராயணன் ஜலத்தில் சயனம் செய்பவன். மண்ணாகிய பூமி எதுவும் செய்யாது. செய்ய இயலாது. ஜலம் சேர்ந்தால்தான் மண் விளை பரமானம்! ஜலமும் மாயாவும் அதன் தொடரும்.
நிலம் ஆகும். மண் பரமானம் ஆகும்.
இயக்கமான உறவு ஆகும்.

அறியாமையின் **ஜீவனுக்கு** எந்த நிலையிலும் **இருப்பு** தன்மையும், **இயக்க** தன்மையும், இல்லாமல், நாசம் செய்து விடுகிறது.

உதா:- ஒளிமைக்கும்/ இனிமைக்கும்/ உண்மைக்கும்! உரியமாபா! இப்போது, உங்கள் யாத்திரையில், பாக்கெட்டில், ஆகார தோஷத்தின், நிவர்த்தி கிருஷ்ணார்ப்பணம் என்றும், பந்த ஜீவ நிவர்த்தி/ சர்வார்ப்பணம் என்றும், தெரிவது இரண்டு. ஒரு சாதகன், இரண்டையும் செய்ய வேண்டுமா? அல்லது ,, சர்வார்ப்பணம் ஒன்றை மட்டும்/ செய்தால் போதுமா?

வைத்தியம்:- கொடுத்தேன்/ உதா! சர்வார்ப்பணம்! ஒன்றே போதும். ஆகார தோஷம்/ நம்மை கெடுத்து விடுமோ? என்று அந்தக் கவலை பயம்/ உள்ளவர்கள் **மட்டும்**/ கிருஷ்ணார்ப்பணத்தையும்/ தொடர்ந்து செய்யலாம்.



118

மூன்றும் ஜீவனும்
இணைந்த பின்
வருது உணவு வகையானும்.
இவ்வுணவை நான்! எனது
எனும் இப்படியால் கோடிம்
உண்டாகிறது. இவற்றால்
உண்டான தோஷங்கள்
(குணங்கள்) இவற்றால்
தான் அழிக்க முடியும்.
அழிக்க வேண்டும். ஆகவே தான்
கிருஷ்ணார்ப்பணம் எனவாக்கால் சொல்லிக்கொண்டு
உணவை உட்கொள்ள வேண்டும். இதை
சர்வார்ப்பணம் பிரம்மார்ப்பணம் என்றும் சொல்வர் முடிந்தது.

வதா:— ஹே அன்பான மாபாவே! இப்படிக்கொண்டாக ஏன் சொல்ல வேண்டும்? ஒன்றே சொன்னால் போதாதா?

வைத்தியம்:— நம்மிடம் **மடி ஆச்சாரம்!** உள்ளவர்களும் அதை விட முடியாமல் தவியாய் தவிக்கிறார்களே! ஆகவே தான் அவ்வாறு சொன்னோம்.

வதா:— சுவணம்! சந்தேகம்! தவக்க பயம் இல்லாதவர்களுக்கு, சர்வார்ப்பணம்! ஒன்றே போதுமல்லவா? பிரம்மார்ப்பணம்! சிவார்ப்பணம்! ஒன்று தானே?

வைத்தியம்:— மனதில், சந்தேக தவக்க பயமற்ற இல்லாதவர்களுக்கு, சர்வார்ப்பணம் ஒன்றே போதுமானது. **ஜீவ** கர்த்தத்துவம்! சர்வார்ப்பணத்தால் அழிந்த பின் வேறு கிருஷ்ணார்ப்பணமோ! வேறு எதுவும் தேவையில்லை. அங்கு பிரம்மார்ப்பணம்! சிவார்ப்பணம்! ஒன்று தான். **சிவா** அர்ப்பணமே அல்லாது **சிவன்** என்ற ஓர் சக்தியின் அர்ப்பணமல்ல!




பக்தர்:- ஆமாம் பாபா! சர்வார்ப்பணத்திற்கு ஏன் அத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?

வைத்தியம்:- ஓராம் மருவியானை வதா! இதை ஓர் உதாரணத்துடன், விளக்குகிறேன். உணர்வாயாக


(A) உன் **உடல்** ஓர் விளக்கூடு, அது இறைவனுடையது ஆகும். அதில் இட்டு அமைக்கும் அரிசி, பருப்பு வகைகள், **புண்ணிய பாபம்** ஆகும். (தூலபாவனை)

(B) ஸ்ரீபகவான், ஓர் **ஸ்விட்ச்** போர்டாகும். இவனை ஓர் சர்வார்ப்பண நிலையில் வைத்துக் கொள். (சாட்சி பாவனை)

(C) யோகமாயாவும் மகேஸ்வரனும், இணைந்த நிலையில், அது ஓர் **மெயின் பாக்ஸ்!** (இது சர்வசாட்சி என்ற அகண்டபாவனையாகும்)

(D) **பவர் ஸ்டேஷன்** இதுபர சொரூபம் என்றும் பரப்பிரம்மமாகும். இது செயல்படாது (மண்) ஆனால் செயல்படுத்தும் (அகண்டாகாரம்)





நாம ரூபம் ஆகும். (120)
நாம ரூபம் கெட்டமறு
வடிவு எல்லாம் தோற்று
மக்கிரமான பதுமையாக
ஆகிவிடும். இதனால் இயக்
கம் கெட்டநிலையில் குண
தோஷங்களும் அழிந்து
நாசமாகும். நாம ரூபமும்
அதன் குண தோஷங்களும்
நாசமாகிப் பிறக்கவது மண்ணோ! மண்ணாகிய பரமே!
பரமாகிய நாமமே! நாமமே அது! அதுவே நாம்!
முடிந்தது.

இனி இயக்கத்தை உணர்வாயாக?

பவர் ஸ்டேஷன் இல்லாமல், மெயின் பாக்ஸ் இல்லை

மின்சாரம் போகாது!
மெயின் பாக்ஸும்! செயலற்ற ஒன்றே! ஆனால் செயல்

பருத்தும் ஒன்றுகூடும். தாரணை இங்கு ஸ்விட்ச் போர்டு!

வேலை செய்து இயக்கிவைக்கான், மெயின் பாக்ஸ் வேலை.

திரண்டரும் (உடலும்) அறிவுமருப்பும் (பொன்னிய பாவு)
இருந்தாலக்கான், ஸ்விட்ச் போர்டுக்கு, மதிப்பு/மரியாதை/வேலை!

இப்படி உணரும் நிலையில்தான், இன்றைய இயக்கம் இருக்கிறது.
ஆகையால்! இன்று! இந்த நேரம் உன் → [illegible]

வினை கழிந்து நாசமாக! ஸ்விட்ச் போர்டு என்ற, ஸ்ரீயகமானின்

சர்வார்ப்பணமே வேண்டும் என்று கூறி இந்த இதனை
பூர்த்தி செய்கிறேன்.
எல்லாம் ஒன்றே! அது சிவமே

பாபா

அதுயாமே! யாமே அது! அது நீங்களோ! இது சத்தியம்.




Abode of Love

You Are Everything!